## September 4, 2025 - *தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்*

1. எதிர்கால சவால்களை வீரர்கள் திறம்பட எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்த ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்) மூலம் போரிடுவதற்கான பயிற்சிப் பள்ளியை பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாடுகள் உடனான இந்திய எல்லையைப் பாதுகாக்கும் எல்லை பாதுகாப்புப் படை (பிஎஸ்எஃப்) தொடங்கியுள்ளது.
   i. மத்திய பிரதேச மாநிலம் டெகான்பூரில் அமைந்துள்ள பிஎஸ்எஃப் அதிகாரிகள் பயிற்சி அகாதெமியில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆளில்லா விமான போர்ப் பயிற்சிப் பள்ளியை பிஎஸ்எஃப் தலைமை இயக்குநர் தில்ஜித் சிங் செளதரி தொடங்கி வைத்தார்.
   ii. இதுகுறித்து பிஎஸ்எஃப் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'இந்த ஆளில்லா விமான போர்ப் பயிற்சிப் பள்ளியில், போரின்போது ஏற்படும் நவீன தொழில்நுட்ப சவால்களை எல்லையைப் பாதுகாக்கும் வீரர்கள் திறம்படக் கையாள்வதற்கான பயிற்சி அளிக்கப்படும்.
   iii. ஆளில்லா விமானங்களை இயக்குதல், ஆளில்லா விமானங்களைத் தாக்கி அழித்தல், ஆளில்லா விமானங்கள் மூலம் கண்காணிப்பு மற்றும் உளவுத் தகவல் சேகரிப்பு ஆகிய 5 சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் இந்தப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.
2. 18-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட போர்க்கால சட்டமான அந்நிய எதிரிகள் சட்டத்தின் (1798)கீழ் வெனிசுலா சட்ட விரோதக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படுப வர்களை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு நாடு கடத்த முடியாது என்று அந்த நாட்டு முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
   i. இது குறித்து 5-ஆவது வட்ட முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளை அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில், 1798-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அந்த சட்டம் 'ட்ரென் டி அராகுவா' போன்ற கும்பல்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு உரியதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
   ii. முன்னதாக, ட்ரென் டி அராகுவா கும்பலைச் சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏராளமான வெனிசுலா நாட்டவரை எல் சால்வடாரில் உள்ள சிறைக்கு டிரம்ப் அரசு நாடு கடத்தியது. பின்னர் ஜூலையில் 250-க்கும் மேற்பட்டோர் வெனிசுலாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இந்தச் சூழலில் அளிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
3. நாடு முழுவதும் 5%, 18% ஆகிய இரு விகித சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வரும் 22-ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
   i. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் தில்லியில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
   ii. இதன் காரணமாக, சப்பாத்தி, பரோட்டா, கூந்தல் எண்ணெய், ஐஸ்கிரீம், தொலைக்காட்சிப் பெட்டிகளின் உள்ளிட்ட பொதுப் பயன்பாட்டு பொருள்களின் விலை வெகுவாக குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதுபோல,

தனிநபர் ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடுகளுக்கு ஜிஎஸ்டியிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்படும்.

iii. நாட்டில் ஒரு சில மாநில வரிகள் தவிர பிற 17 வரிகள் மற்றும் 13 கூடுதல் வரிகளை ஒருங்கிணைத்து 2017, ஜூலை 1-ஆம் தேதி ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் 5%,12%,18%,28% ஆகிய நான்கு விகிதங்களில் வரி விதிக்கப்படுகிறது.

iv. இந்த வரி விதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்ய ஆடம்பர மற்றும் தீமை தரக்கூடிய பொருள்கள் மீது1 முதல் 290 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. இந்த நடைமுறை முதல்கட்டமாக 2022, ஜூன் வரை 5 ஆண்டுகளுக்கு அமல்படுத்தப்பட்டது. அதன்பின் 2026 மார்ச் 1-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

v. இதனிடையே, ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவானதையொட்டி, அதை மேலும் எளிமைப்படுத்தும் விதமாக, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீதான ஜிஎஸ் டியை குறைக்கும் வகையில் அடுத்த தலைமுறை சீர்திருத்தம் (ஜிஎஸ்டி தீபாவளி பண்டிகைக்குகள் மேற்கொள்ளப்படும் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

vi. அதன்படி, நான்கு விகித ஜிஎஸ் டி-யில் 12%, 28% ஆகிய விகிதங்களை நீக்கிவிட்டு, 5%, 18% ஆகிய இரு விகித நடைமுறையைப் பின்பற்றுவது, புகையிலை, குட்கா மற்றும் பான் மசாலா போன்ற குறிப்பிட்ட சில பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிப்பது தொடர்பான முன்மொழிவை மாநில நிதியமைச்சர்கள் குழுவுக்கு (ஜிஓஎம்) நிதியமைச்சகம் வழங்கியது.

4. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளில் மதரீதியிலான துன்புறுத்தல்கள் காரணமாக, அந்நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு 2024-ஆம் ஆண்டு வரை வந்த சிறுபான்மையினரான ஹிந்துக்கள், சீக்கியர்கள், சமண மதத்தினர் உள்ளிட்டோர் கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) அல்லது வேறெந்த பயண ஆவணங்களும் இன்றி தங்க அனுமதித்து, மத்திய உள் துறை அமைச்சகம் உத்தரவு வெளியிட்டுள்ளது.

i. மேற்கண்ட நாடுகளில் மதரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி, இந்தியாவில் தஞ்சமடைந்த சிறுபான்மையினரான ஹிந்துக்கள், சீக்கியர்கள், சமண மதத்தினர், பார்சி மதத்தினர், கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்க வகை செய்யும் குடியுரிமை திருத்தச் சட்டம் கடந்த ஆண்டு அமல்படுத்தப்பட்டது.

ii. இந்தச் சட்டத் தின்படி, இந்தியாவில் 2014, டிசம்பர் 31-ஆம் தேதி வரை தஞ்சமடைந்த இப்பிரிவினருக்கு குடியுரிமை வழங்கப்படுகிறது. அதேநேரம், 2014-ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவுக்கு வந்தவர்களின் நிலை குறித்து கேள்வி வகையில், நிலவியது.

iii. அவர்களின் கவலைகளுக்கு தீர்வளிக்கும் வகையில் அண்மையில் அமலுக்கு வந்த குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம் 2025-இன்கீழ் மேற்கண்ட உத்தரவை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

iv. அதன்படி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசத்தில் மதரீதியிலான துன்புறுத்தலுக்கு உள்ளாகி அல்லது துன்புறுத்தலுக்கு அஞ்சி இந்தியாவுக்கு

2024, டிசம்பர் 31-ஆம் தேதி வரை வந்த சிறுபான்மையினர் (ஹிந்து, சீக்கியம், சமணம், பார்சி, கிறிஸ்தவம்), செல்லத்தக்க கடவுச் சீட்டு அல்லது வேறெந்த பயண ஆவணமும் வைத்திருப்பதில் இருந்து விலக்களிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

v. இந்த உத்தரவின் மூலம் அவர்கள் ஆவணமின்றி தங்க வழிவகை செய்யப்பட்டுள் ளது. இது, அண்டை நாடுகளில் இருந்து 2014-24 காலகட்டத்தில் இந்தியாவுக்கு வந்த மத சிறுபான் மையினர் ஏராளமானோருக்கு நிம்மதி அளித்துள்ளது.

5. இந்தியா - ஜெர்மனி இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த அபரிமிதமான சாத்தியக்கூறுகள் உள்ளன' என்று பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார். இந்தியா வந்துள்ள ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் ஜோஹான் வடேஃபுல் சந்திப்புக்குப் பிறகு இந்தக் கருத்தை பிரதமர் தெரிவித்தார்.
   i. இரு நாடுகளிடையேயான ராஜீய உறவு 25-ஆவது ஆண்டை எட்டியுள்ளது.
   ii. துடிப்பான ஜனநாயக நாடுகளாக மட்டுமின்றி முன்னணி பொருளாதார நாடுகளாகவும் திகழும் இந்தியாவும் ஜெர்மனியும் வர்த்தகம், தொழில்நுட்பம், புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்தி என பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த அபரிமிதமான சாத்தியக்கூறுகள் உள்ளன.

6. மின்மாற்றி உற்பத்தி, ஐவுளித் துறைகளில் பிரிட்டன் நிறுவனங்கள் புதிய முதலீடுகளை செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செய்யப்பட்டன. தொழில் முதலீடுகளை ஈர்ப் பதற்காக ஜெர்மனியில் பயணம் மேற்கொண்டு அதை நிறைவு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலின், லண்டனுக்கு சென்றார். அங்கும் பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.
   i. உலகின் முன்னணி விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பின்போது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயிற்சி மையம் ஆகியன குறித்து ஆலோசிக்கப்பட்டது.
   ii. லாயிட்ஸ் லிஸ்ட் இன்ட லிஜென்ஸ் நிறுவனமானது, முதல் வர் மு.க.ஸ்டாலின் முன்னிலை யில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய் தது. இதன்மூலம், சென்னையில் அதன் உலகளாவிய திறன்மையமானது விரிவுபடுத்தப்படும்.
   iii. வில்சன் பவர் மற்றும் டிஸ்ட்ரிபி யூஷன் நிறுவனம், தமிழ்நாட்டில் ஒரு புதிய மின்சார மின்மாற்றி உற்பத்தி மையத்தை நிறுவ உள்ளது.

7. இந்தியா, ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு (இஎஃப்டிஏ) இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அக்டோபர் 1-ஆம் தேதி அமலுக்கு வரும் என்று ஸ்விட்சர்லாந்து தெரிவித்தது.
   i. ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பில் ஐஸ்லாந்து, லீக்டென்ஸ்டைன், நார்வே, ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.
   ii. இந்தக் கூட்டமைப்புக்கும், இந்தியாவுக்கும் இடையே கடந்த ஆண்டு மார்ச் மாதம் வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டுறவு ஒப்பந்தம் என்ற விரிவான

தடையற்ற ஒப்பந்தம் கையொப்பமானது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், அந்தக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடுகள் இந்தியாவில் 15 ஆண்டுகளில் 100 பில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.8.80 லட்சம் கோடி) முதலீடு செய்ய உறுதிமொழி அளித்துள்ளன.

iii. அத்துடன் ஸ்விட்சர்லாந்து கைக்கடிகாரங்கள், சாக்லேட், வைரங்கள் போன்றவற்றை குறைந்த வரியுடன் அல்லது வரிவிலக்குடன் இந்தியாவில் இறக்குமதி செய்யவும் அந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. இந்த ஒப்பந்தம் அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரவுள்ளதாக ஸ்விட்சர்லாந்து தெரிவித்தது.

8. நாட்டில் முக்கிய கனிமங்கள் மறுசுழற்சி செய்யப்படு வதை ஊக்குவிக்க ரூ.1,500 கோடி மதிப்பிலான ஊக்குவிப்புத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

   i. புதுதில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில், இந்தத் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
   ii. தேசிய முக்கிய கனிமங்கள் திட்டப் பணியின் அங்கமாக இந்த ஊக்குவிப்புத் திட்டம் உள்ளது.
   iii. நிகழ் நிதியாண்டு முதல் 2030-31- ஆம் நிதியாண்டு வரை 6 ஆண்டுகளுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.
   iv. மறுசுழற்சி திறனை ஆண்டுக்கு குறைந்தபட்சம் 270 கிலோ டன்னாக அதிகரித்து, அதன் விளைவாக ஆண்டுதோறும் 40 கிலோ டன் முக்கிய கனிம உற்பத்திக்கு இந்த ஊக்குவிப்புத் திட்டம் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   v. இது ரூ.8,000 கோடி முதலீட்டை ஈர்த்து, நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 70,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய அமைச்சரவை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

9. உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப், இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் (செப். 4) தொடங்குகிறது.

   i. புதிய உலக குத்துச்சண்டை அமைப்பின் கீழ் முதல்முறையாக நடைபெறும் இந்தப் போட்டி யில், ஆடவர், மகளிர் என இரு பிரிவினருக்குமான போட்டிகள் சேர்த்து நடத்தப்படுகிறது.
   ii. இந்தியாவிலிருந்து மகளிர் பிரிவில், இரு முறை உலக சாம்பியனான நிகாத் ஜரீன், டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற லவ்லினா போர்கோஹெய்ன் ஆகியோரும், ஆடவர் பிரிவில் சுமித் குண்டு, சச்சின் சிவச் உள்ளிட்டோரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.